ISSN : 2456-821X அவையம் 2(2) 2018 P.NO. : 35-41

SACRED HEART RESEARCH PUBLICATIONS புதிய அவையம்

# வல்லிசை : தீண்டாமை ஒழிப்பும் சாதி மறுப்பு சிந்தனையும்

**பேரா. ம.பரிமளா தேவி**

உதவிப் பேராசிரியர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்
வேலூர் மாவட்டம்.

**கட்டுரை பெறப்பட்டது : 24.10.2018** **ஏற்கப்பட்டது : 10.11.2018**

## முன்னுரை

**'வல்லிசை'** – எழுத்தாளர் அழகியபெரியவனின் இரண்டாவது நாவல். தலித் சமூக வாழ்வியலின் அரசியலையும் அழகியலையும் தன்னுடைய படைப்புகளில் தொடர்ந்து கவனப் படுத்திவரும் அழகியபெரியவன், இந்நாவலைப் பறையொழிப்புப் போராட்டத்தை உள்ளடக்கமாகக் கொண்டுஎழுதியிருக்கிறார். "இலக்கியமே புரட்சியை உருவாக்கிவிடும் என்று நம்புவது மாயையே. இந்தியாவிலுள்ள தீண்டாமை மற்றும் சாதி அமைப்பின் கொடுமையான சுரண்டல் முறையினை, அறிதலை நோக்கி மக்கள் விழிப்புணர்வு பெறச் செய்வதுதான் தலித் இலக்கியம் என்கிறார் அர்ஜீன் டாங்களே".இந்தக் கொள்கையினை மையமாகக் கொண்டு வல்லிசை நாவலில் எதிரொலிக்கும் தீண்டாமை ஒழிப்பு மற்றும் சாதி மறுப்பு சிந்தனை குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கதைச்சுருக்கம்**

*முழவு, துடி, தண்ணுமைஎனமூன்றுபாகங்களாகநாவலைப்பிரித்திருக்கிறார். இம்மூன்றும் வெவ்வேறு காலகட்டங்களைப் பிரதிபலிக்கின்றன. முழவு என்னும் பகுதி திருவேங்கடம் எனும் தனிமனிதனின் வளர்ச்சியைக் கணக்கில்கொள்கிறது. துடி என்னும் பகுதியோ அத்தனி மனிதன் எப்படி சமூகத்தின் பங்காகத் தன்னை மாற்றிக் கொள்கிறான் என்பதைக் கூறுகிறது. மூன்றாவதோ மானுட வீழ்ச்சியை எதிரொலிக்கும் அத்தியாயமாக இருக்கிறது. தான் உழைத்த சமூகத்தினாலேயே துரத்தப்பட்டு எப்படி மீண்டும் தனிமனிதனாகிறான் அல்லது வழமைக்குள் சிக்கிவிடுகிறான் என்பதை விவரிக்கிறது மூன்றாவது பகுதி. இந்நாவல் மூன்றுதலை முறையைக் கொண்டிருக்கிறது. அதன்கால அளவு, வெள்ளை ஆட்சியாளர்கள் தொடங்கி, எம்ஜிஆர் கட்சி தொடங்கு வதற்கும் மேலான காலமாக நீண்டிருக்கிறது. வெறும் தலித் வாழ்நிலையை மட்டும் சொல்கிறதாக நாவல் இல்லை. சாதிக் கட்டமைப்பில் உயர்ந்தும், தாழ்ந்தும் இருக்கின்ற பலவித சாதிக்குழு மனிதர்களின், வாழ்வியலின் எதிராட்டங்களை, போராட்டங்களை வெளிப்படுத்துகிறது. ஆரம்ப தலைமுறையாகத் தொடங்குகின்ற இராவணேசன் வாழ்நிலை, தான்சார்ந்த மனிதர்களைவிட, தனிப்பட்டசிந்தனை, சமூகஅக்கறை கொண்ட மனிதனாக இருக்கின்றார். தன்சாதிக்குழுமக்களைச் சற்றுமேம்படுத்திக் காட்டவேண்டும் என்ற முனைப்பு இருக்கின்றது. தன்சாதிக் குழுமக்களில் முன்னோடித் தலைவர்களைப் பின்பற்றுகின்றார். மூத்ததோழர்கள் விழிப்புணர்வுக்காகக் கொண்டு வருகின்ற பத்திரிக்கைகளை வாசிக்கும் அறிவுபெற்ற நபராகவும் இருக்கிறார். பொருள்சார்ந்து முன்னேறிய சாதிக்குழு மனிதர்களைப் போலவே, தான்சார்ந்த மனிதர்களும் முன்னேற்றம் காணவேண்டும் என்பதில் விருப்பமுள்ள பாத்திரம் இராவணேசன்.*

*உயர்வு தாழ்வு சாதிக்குழுக்கள் விவரங்களைத் தெரிவிக்கின்ற நாவல் மட்டுமல்ல. காலணா, அரையணா தொடங்கி, நூற்று சொச்சரூபாயில் தற்காலத்தில் நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத பொருட்களை வாங்கமுடிகின்ற காலத்தின் அற்புதங்களை விரிவாகக்காட்டுகிறது. அரசுத்துறை ஊழியர் புதிதாக வாங்கிய சைக்கிள் எப்பேர்ப்பட்ட அதிசயப்பொருளாக மக்கள் கூடிக்கூடிபார்க்கிறார்கள், அதுகுறித்து பேசுறார்கள் என நினைக்கும்போது. அக்காலத்தின் தன்மையை விரிவாகக் கண்டு கொள்ளமுடிகிறது. கதைபெரும்பாலும் வேலூர் மாவட்ட சிறுகிராமங்களைச் சுற்றி அமைந்தது என்றாலும், இராவணேசன் மகன் திருவேங்கடம் சென்னை பச்சயப்பன் கல்லூரியில் படிக்கச் செல்கின்றபோது, சென்னையின் நிலபரப்பை விவரிக்கின்றார். திருவேங்கடம் ஏதோ ஒரு மூலையில் சிறிய கிராமத்தில் படித்துவிட்டு, சென்னை நகரத்திற்கு (இன்டர்மீடியட்) படிக்கவருகின்றான். அவனுக்குப் பொன்னரசு மூத்தமாணவன் நட்பு கிடைக்கிறது. பொன்னரசு, திருவேங்கடத்திற்கு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடத்தைக் காண்பிக்கின்றான். ''மௌண்ட்ரோட்டுக்குப் போனா விதவிதமான கார்களைப் பார்க்கலாம். ஏரிக்கரையில் இருக்கும்*

லயோலாகல்லூரி, தரையில் ஓடும் டிராம், அடையாறுஆறு சுற்றிய புதர்க்காடுகள். இரவுநேரத்தில் சைக்கிளில் விளக்கு இல்லை என்றால் போலீஸ் மடக்கும் வழக்கம் போன்ற கதைச்சூழல் விரிவாகப் போகிறபோது, அக்கால சென்னையின் வரலாற்றுச் சூழலை வாசகன் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகிறது. நாவலில் பொன்னரசு கொஞ்சநாட்களே வந்தாலும் மறக்க முடியாத பாத்திரம். அவரின் போராட்ட குணம், நடைமுறையில் குறுக்கிடும் சாதிய அடக்குமுறை, விடுதியில் நடக்கும் குளறுபடிகள், அவைகளுக்கு எதிரானவாதங்கள், அதிரடிச் செயல்பாடுகள் அற்புதம். எதையும் நேரடியாக எதிர்க்கும் துணிச்சல், பல புத்தகங்களைப் படித்து சமூகத்தை அறிந்து வைத்திருக்கிற திறமை, படிப்பில் சோடை போகாத இளைஞனின் மனஉறுதியை வெளிப்படுத்துகிறது. இராவணேசன் காலத்தில், அதாவது சுதந்திரத்திற்கு முன்காலத்தில், தலித்துகள் பெரிய இன்னல்களைச் சந்தித்திருக்கவில்லை. மிகக் கீழ்மையாக நடத்தப்படவில்லை. சுதந்திர இந்தியாவிற்குப் பிறகுதான் பல முன்னேறிய சாதிக்குழுக்கள் தாங்கள் தங்கள் பொருளாதார வளர்ச்சிக்காகத் தலித்மக்களைப் பெருமளவில் தொந்தரவுக்குள்ளாகி இருக்கிறார்கள் என்கிற தரவுகளைக் காணமுடிகிறது.

**சாதி அமைப்பின் மூன்று அடிப்படைத் தன்மை** என்ன என்று அம்பேத்கார் பின்வருமாறு விளக்குகின்றார்.

1. சமத்துவமின்மைதான் மெய்மை என்பது.
2. ஒவ்வொரு சாதிக்கும் குறிப்பிட்ட ஒரு தொழில், சந்ததியினரும் அந்த தொழிலையே செய்து வர வேண்டும்.
3. ஒரு பிரிவினர் வேறொரு பிரிவினராக மாற முடியாத நிலை ஏனென்றால் பிறப்பினால் சாதி நிர்ணயிக்கப்படுகிறது என்று வலியுறுத்துவது.

இந்த மூன்று கொள்கைகளையுமே கொண்டதாக இந்நாவலின் கதையானது அமைந்துள்ளது. திருவேங்கடம் சென்னையில் படித்துவிட்டு சொந்த ஊரில் சாதி மறுப்பு சிந்தனையைக் குறித்து பேசும் போது அவன் சாதி மக்களும் அதை ஏற்க மறுக்கின்றனர். பறையடிப்பவர்கள் அந்த தொழிலை விடுத்து வேறு ஒரு தொழிலைச் செய்ய விடாமல் தொடர்ந்து தடுக்கின்றனர். "இசையில் சுதி வேறுபாடு இருக்கலாம். சாதி வேறுபாடு இருக்குமா? பறையைச் சாதியோடு பிணைத்திருப்பது ஒருசதி. ஆனால் விளக்கங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதற்கு இது நேரமில்லை. என்கையில் திணிக்கப்பட்ட பறையை நட்டநடுவெளியில் வீசி எறிகிறேன் என்று சமத்துவமின்மையின் அவலங்களை எடுத்துரைக்கின்றார்.

**தீண்டாமை கொடுமை**

இராவணேசன் தன் மகனுடன் சாப்பாட்டுக் கடைக்குள் நுழைகின்றான்.சோற்றில் கைவைத்து சாப்பிடத் தொடங்கியபோது கல்லாவில் அமர்திருந்த முதலாளி " டேய் தம்பி நீ எம்மவங்கூடப் படிக்கிறவந்தானே? சைக்கிளோட இங்க நின்னு அவனோட பேசறத பாத்திருக்கனே?" "ஆமா" "பறப்பயலே ,உனக்கு இங்க எலையில சாப்பாடோ? வேலைக்காரனை அழைத்து இருவரின் இலையையும் பிடுங்கச் சொன்னான். "என்ன மயிருக்குத் துட்டுவாங்குற? கட நடத்துற? பேதம் பாக்கக் கூடாதுன்னு வெள்ளக்காரன் சட்டம் போட்டுருக்கான். காலம் மாறினு வருது, நீங்க மாறமாட்டேன்றிங்களேடா." என்று இராவணேசன் உரக்க தன் குரலைப் பதிவுசெய்கின்றான்.பூங்குளத்திலிருந்தும் மற்ற சேரிகளிலிருந்தும் யார் பெரிய பேட்டைக்குப் போனாலும் அவர்களுக்கு முடிவெட்டுவதில்லை. ஜாதிக்காதர்களின் தெருக்களில் செருப்புடன் நுழைய முடியாது. தேநீர் கடைகளில் இரட்டைக்குவளை. ஊரில் இருக்கின்ற இரண்டு மூன்று உணவகங்களில் கூட எல்லோரோடும் ஒன்றாக அமர்ந்து சாப்பிடமுடியாது.சேரிக்காரர் எவரும் நல்ல உடை உடுத்திக் கொண்டு வேலைக்குப் போய்விட முடியாது.என்ன கலெக்டர் உத்தியோகம் பாக்கவந்தியோ? என்ற கேள்வி எழும். கிறிஸ்தவ மிஷன் பள்ளிக்கூடங்களைத் தவிர மற்றவற்றில் சேரிப்பிள்ளைகள் தனியாக இருக்கவேண்டிய கொடுமைகளைப் பதிவுசெய்துள்ளார்.

**சாதியொழிப்பு போராட்டம்**

இராவணேசன் தன் மகன் திருமலையிடம்" தலைவர் சிவமலை அம்பேத்கர் வழியில போறவரு. கோயில் நுழைவுப் போராட்டம் , சமபந்தி போஜனம் எல்லாம் நல்லது தான். ஆனால் அதைவிட முக்கியமானது அரசியல் அதிகாரத்தைப் பெறுவது, உயர்கல்வி பெறுவது, வேலைவாய்ப்பைப் பெறுவது, பொருளாதாரத்தைப் பெருக்குவதுன்னு அம்பேத்கர் சொன்னாரு சாதிய ஒழிச்சா கோயில்ல நொழையறதெல்லாம் சகஜமாயிடும்னும் சொல்லியிருக்கிறாராம் அவரு. அதை நம்ம தலைவர் நம்புறாரு. சாதியொழிப்பு போராட்டம்தான் முக்கியமானது.அதுல ஒரு பகுதிதான் கோயில் நுழைவு" என்கிறான். சாதியொழிப்பு போராட்டத்தின் மையம் கல்வி. அதை நீ பெற்றால் தான் உன் சாதியை ஒழிக்க முடியும் என்கிறான். எல்லா கதாபாத்திரங்களின் மூலமும் மக்கள் விழிப்படைவதற்கான அத்தனை செய்திகளையும் வெளிப்படுத்துகின்றார். கல்வி ஒரு வலிமையான ஆயுதம்.அதைத் துல்லியமாய்ப் பயன்படுத்தி உன்னையும் ,உன் மக்களையும் கட்டியிருக்கிற கட்டுகளை அறுக்கக் கத்துக்கணும்.கவனமாப் படி என்று திருவேங்கடத்திடம் சிவராஜ்கூறினான்.

**தன்னம்பிக்கை**

"எதுக்கும் பயிப்படாதடா திரு. பயம் ஒரு நோய் மாதிரி அத இந்த வயசிலே கிள்ளிப்போடலன்னா பொறையோடிடும்.தயங்காத. மனசுல பட்டத பேசு. வார்த்தை மூலமாதானடா நெனைக்கிறத சொல்ல முடியும்? அமைதியா இருந்தா உன் மனசுல இருக்கிறது எதிராளிக்கு எப்படித்

*தெரியும்? மனச படிக்கிறவன் இந்த உலகத்திலயே கெடையாது. அப்பிடி இருந்தா மொழியே தேவைப்படாது.கதை, கவிதைங்கள படிக்கணும் .மொழியையும் மனிதர்களையும் அதுங்கள்ளேர்ந்து தெரிஞ்கிக்கலாம். மனசு பண்படும்.அரசியல் படிக்கணும். அது உன் சமூகத்தை உனுக்குத் தோலுரிச்சி காட்டும். நீ தெளிவடையலாம் என்று தன் சமூகத்துக்கான தனது குரலைக் கதாபாத்திரத்தின் மூலம் வெளிப்படுத்துகிறார் அழகிய பெரியவன்.*

*அடிமைப்பட்டுகிடந்த இந்தியாவில் ஒரு கனவு இருந்தது. அது இந்தியா சுதந்திரம் அடைந்துவிட்டால் ஜாதி ஒழிந்துவிடும் என்று ஆனால் அதற்கான சாத்தியங்கள் மிக குறைவு என்பதைத்திருவேங்கடம் "சுதந்திரம் வந்தா ஜாதிக்கொடுமையெல்லாம் ஒழிஞ்சிடுமில்லியா ? ஒரே ஒரு சட்டம் போட்டுட்டாப் போதுமில்ல?" சிவமலை ஒரே சட்டத்துல சாதிய ஒழிச்சிட முடியுமான்னு தெரியில. அது புனிதப்படுத்தப்பட்ட அசிங்கம் .ஒரு சுரண்டல்முறை. தனக்குக் கீழ .இருக்கிறவனோட உழைப்பை ,உடைமையை, சுயமரியாதையைச் சுரண்டுவது. தனக்குக் கீழ் ஒரு அடிமை இருக்கிறத யாருமே விரும்புவாங்க தானே? இந்த ஆண்டை அதிகாரத்தை இழந்திடக் கூடாதுன்னுதான் இத மதத்தோடவும் , பிறப்போடவும் இணைச்சி வச்சிருக்கான். இது ஒழிக்கப்படணும். ஆனா இங்க போராடுற தலைவர்களுக்குச் சுதந்திர இந்தியாவைப் பற்றிய உறுதியான எந்த கருத்துக்களும் இல்ல. சிலர் இதை இந்து நாடாக்கணும்னு நெனைக்கிறாங்க. பாகிஸ்தான் பிரிவினையை எதிர்க்கிறாங்க. காந்தியாரோ பழமையைப் போற்றுகிறார். அதுல சாதியும் அடக்கம்.கல்வியின்மை, வறுமை,சாதி ,பெண்நிலை, மருத்துவம் எதைப்பற்றியும் தெளிவான பார்வையில்லை.இங்க இவங்க நினைப்புதான் என்ன? சுதந்திரம் வந்துட்டா எல்லாம் சரியாயிடும். இது விபரீதமானதொரு கற்பனை .இந்த தருணத்துல அம்பேத்கர் கிட்டயும் ஈ.வே.ரா கிட்டயும் மட்டும்தான் இதுங்களைப் பற்றிய சில தெளிவான திட்டங்கள் இருக்கு. சாதிதான் தேசியப்பிரச்சின.ஆனா அதைப்பற்றி இவங்க ரெண்டுபேரைத் தவிர யாருமெ பேசலியே? நாள்தோறும் ஜாதிக்கொடுமை. சேரியே ஒரு திறந்தவெளி கூண்டுதான். நாளைக்கே சுதந்திரம் வந்தாலும் தாழ்த்தப்பட்ட ஒருவன் சாதியிந்துவோட அடிமைதானே? அப்ப யாருக்கு இந்தச் சுதந்திரம்? சாதிய ஒழிச்சுட்டோம்னு சட்டம் போடறது பெருசில்ல. சாதியாளுங்க மனசுல மாற்றம் வரணுமே .அதுக்கான வேலை இங்க என்ன நடந்திருக்கு?"என்கிறார்.*

**நம்பிக்கை**

*சிவமலை திருவேங்கடத்திடம் "உலகம் சில புள்ளிகளை அச்சாகக்கொண்டு இயங்குகிறது. ஆண் பெண் ஈர்ப்பு , பொருள் சார்பு ,மதம் , மொழி ,அதிகாரம் ,ஜாதி .இவற்றையே நான் அந்த இயங்குபுள்ளிகளாக நினைக்கிறேன். இந்த அச்சுகளைக் பற்றிச் சுழலும் உலகம் இவற்றிலிருந்து பிரியும் செயல் அடுக்குகள் மூலமாகத் தன்னை ஸ்தாபித்துக்கொள்கிறது.பால் ஈர்ப்பு,*

மொழி,பொருள்சார்பு போன்றவை பழைய அச்சுகள் . அதிகாரம், மதம், ஜாதி போன்றவை புதிய அச்சுகள்இந்த அச்சுகள் கூடப் பிற்காரத்துல மாறலாம்''என்கிறார்.

**சாதிமறுப்புச் சிந்தனைகள்**

சிவமலை "உழைக்கிறவன் உயர்ந்தவனா ?உழைப்பைச் சுரண்டுகிறவன் உயர்ந்தவனா? அவனை எதற்கு ஆண்டைமாரே என அழைக்கிறாய்? மனிதர்கள் அனைவரும் சமம்தானே, இந்தச் சாதிப் பிரிவினை எங்கிருந்து முளைத்தது? வெள்ளையாய் உடுத்து .தினமும் சவரம் செய்.ஆண், பெண் பாகுபாடின்றி எல்லா பிள்ளைகளையும் படிக்கவை. மூடநம்பிக்கைகளை ஒழித்துக்கட்டு ஒன்றுபட்டு இரு'' என்கிறார்.

**செய்ய வேண்டியவை**

ஒடுக்கப்பட்ட மக்கள் சாதி இழிவிலிருந்து வெளியேற வேண்டும் என்றால் பல தியாகங்களைச் செய்திட வேண்டும். எந்தச் சடங்குகளும் மரபுகளும் நம்மைக் கடையராக்குகின்றனவோ அதைத் தூக்கியெறியுங்கள்.பறையடிக்கப் போகாதீர்கள். இறந்துபோன மாட்டை அப்புறப்படுத்தாதீர்கள். அதன் இறைச்சியை உண்ணாதீர்கள் .சாவுச்செய்தியைச் சொல்லவோ, பிணக்குழி வெட்டவோ, சாக்கடையைச் சுத்தப்படுத்தவோ போகவேண்டாம். சுயமரியாதையுடன் வாழ்வதற்குக் கற்றுக்கொள்ளுங்கள்.நாம் இருக்கும் இடத்திலே வெறுப்பையும் அவமானத்தையும் சுமந்துக்கொண்டு வாழ்வது. மற்றொன்று நமது அவமானகரமான பழக்கங்களையும் தொழில்களையும் விட்டொழித்துவிட்டுப் புதிய வாழ்வை மேற்கொள்வது எனத் தீண்டாமை கொடுமையிலிருந்து விடுபடுவதற்கான தீர்வுகளைக் கொடுக்கின்றார்.

**தீர்மானங்கள்**

- இனி யாரும் கிராமத்தில் பறையடிக்க செல்லக்கூடாது.மீறி அடித்தால் பறை கிழிக்கப்படும்.மேளம் அடிக்கும் வீட்டில் யாரும் திருமணத்துக்குப் பெண்ணையோ ,பிள்ளையோ எடுக்கக்கூடாது.
- ஆண்டைகளின் வீட்டில் செத்த மாட்டை அப்புறப்படுத்தக்கூடாது. ஜாதி இந்துகளின் பிணத்துக்குக் குழிவெட்டுவதோ,எரியூட்டுவதோ கூடாது.
- சாவு சேதி சொல்லபோவதோ,பாடை கட்டித்தருவதோ தடை செய்யப்படுகிறது. சாக்கடையைச் சுத்தம் செய்வதோ மலக்குழியைச் சுத்தம் செய்வதோ கூடாது.

***மாற்றம்***

*''பறையை நவீனப்படுத்துங்க. எல்லாருமே அத அடிக்கிற மாதிரி மாத்துங்க .மத்த இசைக்கருவிகளோட அதையும் சேர்த்து வாசிக்கிற மாதிரி செய்யுங்க.நேர்த்தியா உடை உடுத்தினு அடிங்க. எல்லா நிகழ்ச்சிக்கும் வாசிக்கிற மாதிரி செய்யுங்க. கோவில் காரியங்களுக்கு வாசிங்க. அஞ்சுக்கும் பத்துக்கும் போய் ஏன் அடிக்கிறீங்க.இவ்ளோன்னு ஒரு கட்டணத்த வையுங்க. அப்ப தானா மாறும்.'' என்கிறார் திருவேங்கடம்.*

***பெயர் அரசியல்***

*கதையின் நாயகன் இராவணேசன் தன் மகனுக்குத் திருவேங்கடம் என்று பெயர் வைக்கிறான். இராவணேசன் மகன் திருவேங்கடம் .கூட்டமைப்பின் தலைவர் சிவமலை , நண்பன் சிவலிங்கம் பெயர்களில் அரசியலை காணமுடிகின்றது. பறையர்களின் பெயர்கள் கூட ஆண்டானின் விருப்பம் போல் இருக்க வேண்டும் என்பதற்குப் பதிலாகப் புரட்சியை ஏற்படுத்துவது போல் உள்ளது.*

***முடிவுரை***

*தீண்டைமை மற்றும் சாதி ஒடுக்கு முறைகள் மிகத் துல்லியமாகவும் நேர்த்தியாகவும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து வெளிவருவதற்கான சில வழிமுறைகளும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது. சட்டங்கள் மூலம் சாதியை ஒழிக்க முடியாது. ஆனால், மனித மனத்தின் மாற்றமே சாதிய ஒடுக்கு முறையை ஒழிக்கும். பாத்திரப் படைப்புகள் வழி அம்பேத்கர், பெரியார் சிந்தனைகளைப் பிரச்சாரத் தொனியில் இழையோட விட்டிருக்கிறார். இந்நாவல் முழுதும் நிறைந்து கிடக்கும் சிந்கனைகள் அடுத்தக்கட்டத் தலைமுறையின் புரட்சிக்கும் விடுதலைக்கும் வித்திடும் எனத் துணிய முடிகிறது.*

***துணைநூற்பட்டியயல்***


1. *முனைவர்.க.பஞ்சாங்கம் இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடுகளும்,அன்னம் பதிப்பகம்,தஞ்சாவூர், 2016.*
2. *அழகிய பெரியவன் ,வல்லிசை,நற்றிணை பதிப்பகம் ,சென்னை,2016.*